★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 2உ வியாழன் (15—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 3உ வெள்ளி (16—3—56) [இதழ் 233

கண் கெட்ட பிறகு ஞாயிறு வணக்கம்!

புதுடில்லி, மார்ச் 14—

புதிய சர்க்கரை ஆலைகளைத் திறப்பதில், இந்தியத் துணைக்கண்டம் முழுவதுக்குமாகத் தரப்பட்டுள்ள அனுமதிகளில், 80 சதவிகித அனுமதிகள் தென்னிந்தியாவிற்குத் தரப்பட்டு இருப்பதாக உணவு மந்திரி ஜெயின், மக்கள் சபையில் கூறியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

வருந்துகிறோம்

10—3—56 அன்று தி. மு. கழகத் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு வந்திருந்த மாணவத் தோழர் நாகராஜன் என்பவர், கூட்டம் முடிவுற்று திரும்பிச் செல்லுகையில் இரயில்வே பாலத்தைக் கடந்துகொண்டிருக்கும் பொழுது—ஏற்பட்ட எதிர்பாராத விபத்துக்குள்ளாகி இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துகின்றோம்.

அன்றிரவு 11 மணிக்கு அண்ணா அவர்கள் இச் செய்தியை துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் மூலம் அறிந்து திடுக்கிட்டு, கண்களில் நீர்ததும்பச் செயலற்று நின்றுவிட்டார். பின்னர் பொதுச்செயலாளர் அவர்களும் இச்செய்தி அறிந்து மிகவும் வருந்தினர்.

எதிர்பாராத விபத்தால் இயற்கை எய்திய நாகராஜன் குடும்பத்தாருக்கு தி. மு. கழகத் தலைமை நிலையம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

வரம் கொடுக்கும் தேவன்! வழி மறிக்கும் பூசாரி!

'ஜோர்டானில் அரபுப் படைகள் தளபதி பதவியிலிருந்த ஜெனரல் சர். ஜான் கிளப் என்பாரை விலக்கிய ஜோர்டானின் நடவடிக்கை முழு அளவுக்கு இராக் ஆதரிக்கிறது' என்று இராக் அயல்நாட்டு அமைச்சர் பர்ஹானுதீன் பாஷாயன் தரிவித்திருக்கிறார்.

தேவிகுளம்-பீர்மேடு வாக்கெடுப்பை வற்புறுத்த முடியாதாம்!

வாக்கெடுப்பை ஒப்புக்கொள்வதா? அதைப் பொது விதியாகக் கொள்ளவேண்டி வருமே!

செங்கோட்டையைப் பிளப்பதற்குச் சென்னை சர்க்கார் ஒப்பவில்லையாம்!

டில்லியின் எதேச்சாதிகாரத்திற்குப் பணிவதே தமிழர் கடமையாம்!

காமராசர் துரோகம் பூர்த்தி!

தேவிகுளம் - பீர்மேடுவின் எதிர்காலத்தை, அங்குள்ள மக்களின் கருத்தறிந்து முடிவு கட்டப்பட வேண்டும் என்பது கூட்டணியினரின் கோரிக்கை.

பிணக்குள்ள பிரச்சினைகளில் மக்கள் கருத்தறிவதற்கு வாக்கெடுப்பது என்பது உலகம் ஒப்ப முடிந்த சிறந்த மார்க்கமாகும். இதுவே ஜனநாயகப் பண்பாடு. இதை விடுத்து, வேறு எம்முறையை, உயர்ந்த நல்லெண்ணத்துடன், எவர் மேற்கொள்வதாக இருந்தாலும், அது எதேச்சாதிகார முறையாகுமே ஒழிய, அதை மக்களாட்சி முறை என நல்லறிவாளர் ஒப்பார்.

நடைபெற்ற பொதுவேலை நிறுத்தம்பற்றி மக்கள் சபையில் கருத்து அறிவித்த பண்டித நேரு, தேவிகுளம் - பீர்மேடு பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்துவது தமக்கு உடன்பாடு உடையதே எனப் பொருள்பட பேசினர். அதை செயலாற்றும்படி வலியுறுத்த சென்னை அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கூட்டணி கோரியது.

இத்திங்கள் முதல் வாரத்தில் பெங்களூரில் இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்களை சந்தித்துப் பேசிய சென்னை முதலமைச்சர் காமராசரும், நிதிஅமைச்சர் சுப்பிரமணியமும், நேருவாலேயே நியாயமானது என ஒப்புக்கொள்ளப்பட்ட, வாக்கெடுப்புக் கோரிக்கையை வலியுறுத்தாது, வேறு கதைகளைக் கூறிவிட்டு வந்துள்ளனர். இந்த உண்மையை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் வெளிப்படுத்தி உள்ளார்.

'தேவிகுளம் பீர்மேடு பிரச்சினைக்கு வாக்கெடுப்புத் தத்துவத்தை ஏற்றுகொள்ளும் பட்சத்தில், அதையே மற்ற பிணக்குள்ள பகுதிகள் அனைத்துக்கும் மேற்கொள்ள வேண்டிவரும்' என நிதிஅமைச்சர் கூறுவதின் மூலம், தேவிகுளம் - பீர்மேடு விவகாரத்தில் காமராசர் அரசாங்கம், தமிழர்களுக்குச் செய்துள்ள துரோகத்தைப் பூர்த்திச் செய்கிறார்!

"சென்னை அரசாங்கத்தின் ஒப்புதல்மீதே செங்கோட்டைப் பிரிக்கப்பட்டது என்றே தி. கொ. முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்; அதுவும் சரியானதல்ல. பத்திரிகையில் வருகிற ஒவ்வொரு கருத்துக்களையும் நாங்கள் மறுத்துக்கொண்டு இருப்பது முடியாது. அரசாங்கத்தின் நல்லுணர்வை மக்கள் அறிவர். எனவே, ஒவ்வொரு கூட்டத்திலும் நல்லுணர்வை உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கமுடியாது."

—இவ்வாறு நிதி அமைச்சர் கூறியதைக்கொண்டு, தி. கொ. முதலமைச்சர் பொய் புகன்றுள்ளார் என்றே எவரும் எண்ணுவர்.

அதுவுமன்றி சென்னை அரசாங்கத்தின் ஒப்புதல் பெறுமலே தி. கொ. முதலமைச்சரின் கோரிக்கைக் கிணங்கி, ஓரவஞ்சனையாக இந்தியப் பேரரசு, செங்கோட்டையைப் பிளந்து இருக்கிறது என்றே ஏற்கவேண்டியதாக இருக்கிறது.

செங்கோட்டை முடிவுபற்றி இந்தியப் பேரரசு வெளியிட்ட அறிக்கையில், 'தகராறில் சம்பந்தப்பட்ட இருசாராரின் இணக்கத்தின்மீதே தீர்ப்பளிக்கப்பட்டது' என்று விளக்கம்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

காமராசர் சர்க்காரின் வரைகடந்த அடக்குமுறை

24 தோழர்கள்மீது வழக்கு; ஐந்து பேருக்குத் தண்டனை

கடந்த பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலைநிறுத்தத்தின் போது கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சென்னி மலையில் சர்வ கட்சியைச் சேர்ந்த 24 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

நான்கு 'வாய்தா'க்களுக்குப் பிறகு 5 தோழர்களுக்கு தலா ரூ. 5 அபராதமும் தவறினல் 2 நாள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது.

அபராதம் கட்ட மறுத்து தோழர்கள் பி. எம். சி. லிங்கம், எம். ஆர். முகுந்தன் (தி. மு. க.) சுப்ரமணியம் (சோஷலிஸ்ட்) மற்றும் இருவரும் சிறைபுகுந்தனர். இதர தோழர்கள்மீது பெருந்துறை வழக்கு மன்றத்தில் வழக்கு நடக்கிறது. (ந. கி.)

'நமக்கென ஓர்இடம் பெற்றுள்ளோம்'

'நாட்டவர்க்கான திராவிடத்தைப் பெறுவதெப்போது?'

கழகத் திடலில் பொதுச்செயலாளர் கேள்வி

பிப். 20—அர்த்தால் குறித்து முன்னணி வீரர்கள் முழக்கம்

"திராவிட முன்னேற்றக் கழகம் இன்று தனக்கென ஓர் புதிய இடத்தைப் பெற்றுள்ளது. நமக்கென ஓர் இடம் பெற்றுவிட்ட நாம் நாட்டவர்க்கென—திராவிடர்க்கென ஓர் இடமான திராவிடத்தைப் பெறுவதற்காகப் பாடுபடுபவர்கள். நாட்டவர்க்கு உரிய நாட்டைப் பெறுகிற பெரும் பணியில் ஈடுபட்டுள்ள நாம் நமக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ளதில் மகிழ்வது இயற்கையே நமக்கென இடம் பெற்றுவிட்டோம்—நாட்டவர்க்கான திராவிடத்தைப் பெறுவது எப்போது?

"நமக்கென நாம் பெற்றுள்ள இந்த இடத்தில் நடைபெறும் முதல் நிகழ்ச்சியாகும் இந்தக்கூட்டம். இந்தக் கூட்டம் கடந்த பிப் 20-ல் தமிழகமெங்கணும் நடைபெற்ற அர்த்தாலுக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைகளை அறிவிக்கவும், அர்த்தால்வெற்றியுறுவதற்கு உழைத்தவர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்ளவும் ஆக கூட்டப்பட்ட கூட்டமாகும் இது.

"கடந்த பிப் 20-ந்தேதி நடைபெற்ற அர்த்தால், இதுவரை தமிழக வரலாற்றில் நிகழாதது. இப்படிப்பட்ட வெற்றிகரமான அர்த்தால் இதுகாறும் நடைபெற்றதே இல்லை என்ற சிறப்புப் பெற்றதாகும். இந்தச் சிறப்பான அர்த்தாலில் பங்குகொண்டு உழைத்த தி. மு. கழகம், அர்த்தாலின் வெற்றி கண்டு மகிழ்கிறது. அந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்ளவும்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம்,"

—என்று கடந்த 10-3-56 அன்று நுங்கம் பாக்கத்தில் தி. மு கழகத்திற்கென வாங்கப்பட்டுள்ள தி. மு. க. திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து கழக முன்னணி வீரர் பலரும் பல்வேறு தலைப்புகளில் ஆற்றிய உரையின் சாரம் கீழே தரப்படுகிறது:—

என். வி. நடராசன்

(அர்த்தாலும் கூட்டணியும்)

"கடந்த பிப். 20-ல் நடைபெற்ற வெற்றிகரமான அர்த்தால் சர்வ கட்சிக் கூட்டணியினர் முன்னின்று நடத்தப்பட்டதாகும். அந்த சர்வ கட்சிக் கூட்டணி அமைந்த ஜனவரி 27-ந் தேதி தமிழக வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய பொன்னாளாகும்.

"மாநில புதுஅமைப்பு விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு டெல்லி இழைத்துள்ள அநீதி நாடறிந்ததே அந்த அநீதிக்கு எதிராக, தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பதற்குத்தான் சர்வ கட்சியினரும் ஒன்றுகூடினர். கூட்டணியின் நோக்கமெல்லாம், தமிழ் மக்களின் உரிமைகளை, எல்லைப் பகுதிகளைக் காப்பதேயாகும்.

"தமிழ் பகுதிகளில் பல, கேரள மாநிலத்துடனும் சில ஆந்திர மாநிலத்துடனும்தான் இருக்க வேண்டுமென, மாநில புது அமைப்பு குறித்த நேரு பண்டிதரின் தீர்ப்புக் கூறிற்று. அந்தப் பகுதிகளை மீட்கவே, அவற்றைத் தமிழகத்துடன் இணைக்கச் செய்யவேதான் சர்வ கட்சிக் கூட்டணி அமைந்திருக்கிறது. இந்தக் காரணத்திற்காக, நல்ல நோக்கத்தோடு அமைந்திருக்கிற கூட்டணியைத்தான் இந்த மாநிலத்திலே உள்ள ஆட்சியாளர்கள் எளனப்படுத்துகின்றனர்; ஏசிப் பேசுகின்றனர். ஆனல் கூட்டணி நடத்திய பிப். 20-ந் தேதி அர்த்தால் வெற்றிகரமாக முடிந்த பிறகு, யாருடைய கண்களைத் திறக்க வேண்டுமோ, அவருடைய கண்களைத் திறந்திருக்கிறது. யார் கூட்டணியை மதிக்க வேண்டுமோ, அவர் கூட்டணியை மதித்திருக்கிறார். கூட்டணியின் கோரிக்கைக்குச் செவி சாய்ப்பதுபோலப் பேசியிருக்கிறார். எனவே இந்த மாநில ஆட்சியாளர்கள் கூட்டணியை இழித்தும் பழித்தும் பேசுவதினாலேயே கூட்டணியைச் சிதைத்துவிட முடியாது இந்த மாநில சர்க்காருடைய எந்தச் சாணக்கியமும் கூட்டணியை உடைத்துவிட முடி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—3—'56 வியாழன்

'அறத்தின் நீங்கிய அரக்கன்'

தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்றொடரிலும் கடுமையான சொற்றொடர்களுக்குப் பாத்திரமாக[illegible]யதாக, நிதி அமைச்சர் சுப்[illegible]ணியம் அவர்களின் இ[illegible]செயல் இருந்துவருகிறது. அ[illegible]ச்சர்களாக இருந்து அவர் [illegible]மிழ் மக்களுக்குச் செய்துவ[illegible]ம் துரோகச் செயல்களைக் கூட மன்னித்துவிடலாம். ஆனால் எதிர்கால அரசியல்வாழ்விற்கு, தம் சொல்லாலும், செயலாலும் அவர் சூழ்ந்துவரும் கெடுங் கேட்டினை, பொது வாழ்வின் புனிதம் காப்பாற்றப்படவேண்டும் என்ற கோட்பாடு கொண்ட எவராலும் பொறுத்துக்கொள்ளவே முடியாது.

வாய்மை என்ற ஒரு சிறந்த சொல்லிருப்பதையே அவர் அறியார் போலும்!

உண்மையை மறைத்தலும், திரித்துக் கூறலும்தான், அரசியல் துறையில் வெற்றி பெறுவதற்குரிய உயர்ந்த வழி என்றே நிதி அமைச்சர் உறுதியாக நம்பிக்கிடக்கிறார் என்பதை அவர் சொல் மெய்ப்பிக்கிறது.

நேற்று முன் தினம் சட்டசபையில் பிப்ரவரி இருபதில் வெற்றிகரமாக நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் பற்றியும், இரண்டொரு இடங்களில் பாதுகாப்புத் துறையினர் அளவு கடந்து நடந்துகொண்டது பற்றியும், கள்ளக்குறிச்சியிலும் தம்மம்பட்டியிலும் பாதுகாப்புத் துறையின் குட்டி எதேச்சாதிகாரிகள் தற்காப்புப் போர்வையில் பழிவாங்கும் குணத்துடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது பற்றியும் உறுப்பினர்களில் சிலர், நிதி அமைச்சரிடம் வினவியுள்ளனர். அவைகளுக்கு நிதியமைச்சர் கூறியுள்ள பதிலில், தாம் ஒரு 'அறத்தின் நீங்கிய அரக்கன்' என்பதையும், 'இரக்கமென்ற பொருளிலா அரக்கன்' என்பதையும் ஒப்புக்கொள்வதுபோல், வடிகட்டின பொய்யை அழகுபட, பதிலாகக் கூறியுள்ளார்.

இதுவரை அரசியல் வரலாறே கண்டிராத வகையில் பிப். இருபது பொதுவேலை நிறுத்தம் தமிழகமெங்கணும் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது என்ற உண்மையை, வாய்மை ஒழித்து வாழும் பொது வாழ்வுப் பந்தயத்தில் நிதி அமைச்சரையும் தோற்கடித்துவிடக் கூடிய அளவில் பயிற்சி பெற்றுள்ள தேசீய ஏடுகள்கூட ஒப்புக்கொண்டுள்ளன. அது பற்றி தேசீய ஏடுகளில் ஒன்றான 'சுதேச மித்திரன்' தனது தலையங்கத்தில் ஒப்புக்கொண்டுள்ள உண்மையையும் முன்னரே நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். புதிய வெள்ளைத் தோல் போர்த்த தேசீய—வகுப்புவாத ஆங்கில தினசரி 'மெயில்' ஏடுகூட, வேலை நிறுத்தத்தின் மகத்தான வெற்றியை ஒப்புக்கொண்டு, அவ்வெற்றியைக் கறைபடுத்த பொருத்தமற்ற காரணத்தைக் காட்டியது.

'நேற்று தமிழ் நாட்டில் அர்த்தால் கூடியவரை அமைதியாகவே நடந்தேறியது. ஒரு சில இடங்களில் மட்டும் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது. ஒரு ஸ்தலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது துக்ககரமானது. ஆனாலும் மொத்தத்தில் அர்த்தாலுக்கு ஏற்பாடு செய்தவர்கள் கூடியவரை முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர் என்பதில் சந்தேகமில்லை' என்று 'சு. மி.' எழுதி இருக்கிறது. தமிழ் நாட்டில் இரண்டொரு இடங்களில் மட்டுமே அர்த்தால் நடைபெற்று இருந்தால், அச்சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'சு. மி.' தலையங்கம் தீட்டும் என்றும் எவராலும் சொல்ல முடியாது. அதிலும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, மற்ற அரசியல் கட்சியினர் கூட்டணியாகச் சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு செயலுக்கு, 'சு. மி.' முக்கியத்துவம் கொடுக்கும் என்பது, அதன் வாழ்க்கையிலேயே இதுவரை கிடையாது.

எதிர்க் கட்சியினரின் நடைமுறைகளை இருட்டடிப்பது முதல் கட்டம்; இருட்டடிப்புகளை எல்லாம் தோற்கடித்துவிட்டு எதிர்க் கட்சி பெருவாரியான மக்களின் கவனத்தைக் கவர்ந்துவிட்ட பருவத்தில், அக்கட்சி மீது பழிச்சுமத்தி தொலைக்கப் பார்ப்பது இரண்டாவது கட்டம்; அப்பழிச் சொல்லையும் தாண்டி எதிர்க் கட்சி பேருருப் பெற்றுவிடுமானால், அதைக் கண்டு இஞ்சி தின்ற மந்திபோல் எரிச்சல் கண்டு உளறுவது மூன்றாவது கட்டம்; இந்த மூன்றும்தான் இந்த நாட்டின் தேசீய ஏடுகளின் தொழில் பயிற்சி! கருக்குழியில் குருதியுடன் ஊறிய இந்தக் கயமை, இடுகாடு ஏகி எரிந்து சாம்பலான பின்னரும் கூட இந்த நாட்டு தேசீய ஏடுகளை விட்டுத் தொலையாது போலும்!

இத்திருக்கல்யாண குணம் படைத்த தேசீய ஏடுகளே கூட பொது வேலைநிறுத்தம் நடைபெற்ற அமைதியையும், விரிவையும் ஒப்புக்கொண்டு, கூட்டணியின் பொறுப்புணர்ச்சியையும் பாராட்டிக்கூறியிருக்கின்றன. ஆனால், அந்த மிகச் சிறிய நியாய புத்தியைக்கூட, அரசியல் அகதியாக இருந்து காலப் பிணக்கால் அமைச்சராகும் தகுதி பெற்றுள்ள நிதி அமைச்சரிடம், தமிழ் மக்களால் எதிர்பார்க்க முடியவில்லை.

பொதுவேலைநிறுத்தத்திற்குக் கிடைத்துள்ள பெரும் வெற்றி கைப்பான உண்மையாக நிதி அமைச்சருக்கும், அவர் இயல்பு கொண்ட மற்ற கனங்களுக்கும் இருக்கக் கூடும். அப்பெரும் வெற்றியைப் பிறர் கூறிடக் கேட்பதும் அவர்களுக்குத் தாங்கிக் கொள்ள முடியாததாக இருக்கக் கூடும். இவைகளை எவராலும் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், பொது வேலை நிறுத்தத்திற்குக் கிடைத்துள்ள பெரும் வெற்றியையும், அதிலிருந்து வெளிப்படும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் மனம் ஒத்தப் பொதுக்கருத்தையும், ஒன்றுந் தெரியாத, அப்பொழுதுதான் பூலோகத்திற்கு வந்த பக்கிரிகள் போல் பிதற்றுவது—இல்லை — பேசுவது, ஒழுக்கத்தை என்றும் கேட்டறியாத வழக்கறிஞர் பணிக்குத் தகுந்ததாக இருக்கக்கூடுமே ஒழிய, பொது மக்கள் வரிப் பணத்தை முள்ளங்கி வட்டம் போல் ஒவ்வொரு திங்களும் விழுங்கிக் கொண்டிருக்கும் நிதி அமைச்சர் பதவிக்குத் துளியும் பொருந்தாது.

எதிர்ப்பின் பலத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதில் தான், எதிர்ப்பை நிர்மூலமாக்குவதற்கேற்றத் தகுதியும் தன்மையும்கொண்ட முறைகளை, ஒருவரால் நிச்சயிப்பதும் இருக்கிறது. அரசியல் துறைக்கும் அது பொருந்தும். அந்த யூகம் அரசியலுக்கும் இன்றியமையாத் தேவையாகும்.

அந்த யூகம் தனக்குத்தேவை இல்லை; எவரின் எடுபிடியாகவாவது இருந்து ஒரு பதவியைப் பெற்று மகிழ தன்னால் முடியும்; தட்சிணப் பிரதேச ஆதரவு பேச்சே அப்பதவியை தனக்குத் தேடிக்கொடுத்து விடும்; என்று உறுதியாக நம்பி செயலாற்றுவது போன்றே, நிதி அமைச்சரின் சட்டசபைப் பிதற்றல் அமைந்திருக்கிறது. அது பற்றி நாளை தொடருவோம்.

எல்லாம் அங்கேயே!

புதுடில்லி, மார்ச் 13—

"இந்தியாவில் தற்போது இயங்கி வருகிற சைக்கிள் தொழிற்சாலைகளைத் தவிர, மேலும் ஐந்து தொழில் நிறுவனங்களுக்கு சைக்கிள் தயாரிப்பதற்கான லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புதிய நிறுவனங்களில் இரண்டு உத்தரப் பிரதேசத்திலும், மீதி பெப்சு, பஞ்சாப், டில்லி ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்று வீதமும் இருக்கும்."

என்று, வர்த்தக - தொழிலியல் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

பாறையிலிருந்து தங்கம்!

திருக்கோவிலூர், மார்ச் 10—

இவ்வூருக்கு அடுத்த ஆதிச்சநல்லூர் கிராமத்தில், சாலை சல்லிக்காக கல் உடைத்துக்கொண்டிருந்த ஒரு பாறையில் ஒரு வெடிப்பில் இருந்து சிறுசிறு தங்க வளையல்கள் சிதற ஆரம்பித்தனவாம். இச்செய்தியறிந்த கிராம அதிகாரி மேற்படி இடத்திற்கு வந்து சுமார் 3 வராகன் எடை அசல் தங்கத்தைக் கைப்பற்றி திருக்கோவிலூர் தாசில்தாரிடம் ஒப்படைத்தாராம்.

வளர்ந்து வரும் உலகின் வளம்

ஐ. நா. தரும் ருசிகர விவரங்கள்

உலகின் வளம் வளர்ந்தவண்ணமுள்ளது; மக்கள் தொகையும் வேகமாக வளர்ந்து வருகிறது; வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு, ஏற்ப அவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வகையாக உலகமும் மாறிவருகிறது என்று 1955-ம் ஆண்டிற்கான ஐ. நா. புள்ளி விவரக் குறிப்புகள் கூறுகின்றன.

1954-ம் ஆண்டில் உலகில் மொத்தம் 265 2 கோடி மக்கள் வாழ்கின்றனர் என்றும் இந்த எண்ணிக்கை, 1930-ம் ஆண்டில் இருந்ததைவிட 32 சதவிகிதம் அதிகம் என்றும், 1940-ல் இருந்ததைவிட 18 சதவிகிதம் அதிகம் என்றும், ஐ. நா. கணக்கிட்டிருக்கிறது.

இந்தத் தொகையில் பாதிக்கு மேல், ஆசியாவில் வாழும் மக்களாவர் ஐரோப்பாதான், மிகவும் ஜனநெருக்கமான கண்டம் என்ற தகவலும் தரப்படுகிறது.

உற்பத்தி, செலவு, வருமானம், வர்த்தகம் இவை எல்லாம், யுத்த காலத்திற்கு முன்பிருந்ததைவிட இப்போது அதிகரித்திருப்பதாயும் ஐ. நா. குறிப்பு கூறுகிறது.

1937-ம் ஆண்டில் இருந்ததைப் போல 1954-ம் ஆண்டில் வர்த்தகம் மும்மடங்காகச் செழித்திருக்கிறது. 1953-ல் இருந்ததைவிட 1954-ல் $3\frac{1}{2}$ சதவிகிதம் வர்த்தகம் உயர்ந்திருக்கிறது.

யுத்தத்திற்குப் பிறகு, பிரிட்டன் அல்ல அமெரிக்காதான், அதிகமான வர்த்தகம் செய்த தனிநாடு என்று ஐ. நா. விபரம் தருகிறது.

இன்னும் உணவு உட்கொள்ளல், சக்தி செலவிடுதல் முதலிய பல விவகாரங்களிலும் ருசிகரமான தகவல்கள் கொண்டு விளங்குகிறது ஐ. நா. - வின் குறிப்பேடு.

அசாம் மந்திரிகள் மீது லஞ்ச ஊழல், பாரபட்ச குற்றச்சாட்டு

நெருக்கமானவர்களுக்கு உதவுவது சரியென காங்கிரஸ் உறுப்பினரின் வாதம்!

ஷில்லாங், மார்ச் 14

'உயர் இடங்களில்' லஞ்ச ஊழலும், உறவினருக்குச் சலுகை தருதலும் மிகுந்திருப்பதாக, அசாம் சட்டசபையில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. முதன் மந்திரி, வேறு இரு மந்திரிகள் ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

கௌரிஷங்கர் பட்டாச்சாரி என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர், 'ஒரு மந்திரியின் மகன், மற்றொரு மந்திரியின் மைத்துனர், மற்றொரு மந்திரியின் உறவினர் இவர்களுக்கெல்லாம் வர்த்தக 'பெர்மிட்டுகள்' தரப்பட்டிருக்கின்றன. இவை போன்ற எண்ணற்ற சம்பவங்கள் உண்டு. இந்த 'பெர்மிட்டுகள்' வர்த்தகம் நடத்துவதற்காக உபயோகிக்கப்படவில்லை; ஆனால், இலாபத்திற்காக அப்படியே விற்கப்படுகின்றன' என்று குற்றம் சாட்டினார்.

முதன் மந்திரி விஷ்ணு ராம் மெஹ்தி எழுந்து குற்றச்சாட்டுகளைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாயும், கம்யூனிஸ்டு உறுப்பினர், ஒரு உதாரணம் காட்டமுடியுமா என்று அறைகூவிக் கேட்பதாயும் கூறினாராம்.

உடன், அந்தக் கம்யூனிஸ்டு உறுப்பினர், 'முதன் மந்திரியின் மைத்துனர் விஷயம் என்ன?' என்று கேட்டிருக்கிறார்.

முதன் மந்திரி, 'இந்தக் குற்றச்சாட்டு முழுப் பொய்!' என்று கூறினாராம்.

பின்னர் கம்யூனிஸ்டு உறுப்பினர் வேறு ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டி, அதில் சர்க்கார் பாரபட்சமாக நடந்துகொண்டிருப்பதையும் விளக்கியிருக்கிறார்.

கவர்னர் உரை மீது நடைபெற்ற அந்த விபரீதத்தின்போது ஒரு காங்கிரஸ் உறுப்பினர் கம்யூனிஸ்டு உறுப்பினருக்குப் பதில் கூறினாராம்.

அந்தப் பதிலில்தான் வேடிக்கை புதைந்திருக்கிறது.

"முதன் மந்திரி பாரபட்சமாக, உறவினர்களுக்குச் சலுகை அளிப்பதாக பட்டாச்சாரி குற்றம் கூறுகிறார். ஆனால் அது கடவுளின் சித்தமாகும். ஒவ்வொருவரும், தங்கள் தங்களுக்கு வேண்டியவர்களுள் நெருக்கமானவர்கள், பிடித்தமானவர்களின் நலன்களைக் கவனிக்கத்தான் செய்வர்"

என்று அந்த காங்கிரஸ் உறுப்பினர் கூறினாராம்.

திராவிடத்தில் அணுசக்தி மூலப்பொருள்

ஆனால் அணு உலை பம்பாயில்!

பிரதமர் நேரு தகவல்

திராவிடத்தின் கனிச் செல்வம், எவ்வளவுதான் என்று இன்னும் கணக்கிட்டுவிடவில்லை. நாட்டுப் பற்றுக்கொண்டோர் தொடர்ந்து ஆராய்வார்களானால் எண்ணரும் பொருள்கள் கிடைக்கக்கூடும் என்பதை இதுவரை நடைபெற்றுள்ள ஆராய்ச்சி நமக்குக் கூறுகிறது.

உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை கொண்டது என்று வர்ணிக்கப்படுகிறதே அணுசக்தி— அந்த அணுசக்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் திராவிடத்தில் கிடைக்கின்றன என்பது நாம் உணர்ந்து மகிழத்தக்கதல்லவா?

சென்னை, திரு-கொச்சி மாநிலங்களில் 'யுரேனியம்' படிவங்கள் கிடைப்பதாக, இந்தியப் பிரதமர் நேரு, டில்லி மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த தாதுப் பொருள் எந்த இடத்தில் கிடைக்கிறது என்பதைப் பொது நலன் கருதி குறிப்பாகக் கூறமுடியாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சிக்கு வழி செய்யக்கூடிய வகையில், பம்பாய் அருகே ஒரு அணுசக்தி அமைப்பதற்காக, கனடா நாட்டு நிபுணர்கள் ஏற்கனவே வந்துள்ளனர் என்றும் நேரு தகவலளித்திருக்கிறார்.

மாஜி ராணுவத்தினருக்கு வேலை வாய்ப்புகள்

இரண்டாம் திட்டத்தில் இடமுண்டாம்

'மாஜி' இராணுவத்தினருக்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிரம்ப வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று தற்காப்பு இலாகா மந்திரி தெரிவித்திருக்கிறார்.

"அதனால் 'மாஜி' இராணுவத்தினர், திட்டம் வெற்றி பெற தங்களது முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டாம் திட்டத்தில் கூடியவரை, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தேவையான மேற்பார்வையாளர்களை 'மாஜி' இராணுவத்திலிருந்தே பொறுக்கிக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அம்பாலாவில், 'மாஜி' இராணுவத்தினர் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்தியாவின் நைட்ரஜன் ரக ரசாயன உர உற்பத்தியை 3 80,000 டன்னிலிருந்து 16 லட்சம் டன்னாக அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

நாகரீக நாட்டில் நிறபேதக் கொடுமை

தலைமை உயர்நீதிமன்றத் தீர்ப்பு துச்சமென மதிக்கப்படுகிறது

சட்டமியற்றுவோரே சல்லடம் கட்டுகின்றனர்

அமெரிக்காவில் இன ஒதுக்கல் குறித்த நிலை விளக்கம்

எந்தக் கொடுமையை ஒழிப்பதற்காக பாடுபட்டார் என்பதால் ஆப்ரகாம் லிங்கனுக்குச் சிலை எடுத்தார்களோ, அந்த நிறபேதக் கொடுமை மீண்டும் தலைதூக்கியிருக்கிறது.

நீக்ரோவர் நிறத்தால் கறுப்பாயிருக்கிறனர் என்பதால், அவர்களுக்கு மனிதர்கள் என்ற முறையில் தரப்படவேண்டிய உரிமைகளை வழங்க, இப்போது அமெரிக்க வெள்ளையரில் ஒரு பகுதியினர் மறுத்து வருகின்றனர்.

நீக்ரோவரை ஒதுக்கி வைக்கும் நிகழ்ச்சிகள், சமீபகாலமாக அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

நீக்ரோவ மாணவர்கள் வெள்ளை மாணவர்களுடன், சேர்ந்துப் படிப்பதை தடை செய்யக்கூடாது என்று அமெரிக்கத் தலைமை உயர் நீதி மன்றம் சிலகாலம் முன்பு தீர்ப்பு வழங்கியது—அப்போதே பல மாகாணங்களில், நீக்ரோவருக்கு எதிராகவும், நீதி மன்றத் தீர்ப்பைக் கண்டித்தும் பலத்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

'தலைமை உயர்நீதி மன்றத் தீர்ப்பை மாற்றி அமைப்போம்' என சில மாகாண கவர்னர்கள் கூட கொக்கரித்தனர்.

பின்னர் நீக்ரோ மாணவர்களைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேர்த்துக்கொள்வதை ஏதாவது சாக்குக்கூறி தட்டிக் கழித்து இன ஒதுக்கல் கொடுமையைத் தந்திரமாகச் செய்துவர துவங்கின சில பல்கலைக்கழகங்கள்!

இதைக் கண்டித்து இப்போது மீண்டும் தலைமை உயர்நீதி மன்றம், தீர்ப்பு ஒன்று வழங்கியிருக்கிறது.

தகுதியுடைய நீக்ரோவ மாணவர்களை, பல்கலைக் கழகங்களில் தொடர்ந்து படிக்க அனுமதி தருவதில்—கழகங்களில் சேர்த்துக் கொள்வதில் ஏதாவது சாக்குக் காட்டி காலந் தாழ்த்துவது கூடாது என்று தீர்ப்புக் கூறுகிறது.

வெள்ளை மாணவர்களும், நீக்ரோவ மாணவர்களும் கலந்து கல்வி பெறுவதைத் தடுப்பதற்கு, எல்லாவகையான தந்திரங்களையும் பல தெற்கு மாகாணங்கள், சமீபகாலமாக செய்து வருகின்றன.

ப்ளோரிடா பல்கலைக் கழகம் நீக்ரோவ மாணவர் ஒருவரைச் சேர்த்துக்கொள்ள அனுமதி மறுத்திருக்கிறது. இதற்குக் காரணமாக பல்கலைக்கழக நிர்வாகிகள், உடனடியாக நீக்ரோவ மாணவரைச் சேர்த்துக் கொண்டால், எல்லா மாணவர்களையும் பாதிக்கக் கூடிய சிக்கல்கள் தலைதூக்கக் கூடும். பல்கலைக் கழகத்தையே கூட பாதிக்கக் கூடியதாயும் இருக்கலாம்; எனவே, இது குறித்து இன்னும் யோசிக்கவேண்டும் என்று கூறினர். இதைக் கண்டித்துத்தான் பெடரல் உயர்நீதி மன்றம் இப்போது வழங்கியிருக்கும் தீர்ப்பு.

இந்த தீர்ப்பினை நீதிமன்றம் வழங்கும் இதே நேரத்தில், தென் மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 96 ஜனநாயகக் கட்சி செனட்டர்கள், எப்படியேனும், இன ஒதுக்கல் பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்பை மாற்ற சகலவிதமான சட்டபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவோம் என்று கூறிக்கொண்டு, அமெரிக்க காங்கிரசிற்கு மனு ஒன்று தந்திருக்கின்றனராம்.

இன ஒதுக்கல் பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு, நீதி வழங்கும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது அரசியல் சட்டவிரோதமானது, சட்ட விரோதமானது என்றெல்லாம் அந்த 'செனட்டர்'கள் வருணிக்கின்றனராம்.

சட்டமியற்றும் பொறுப்பிலிருப்போரே சிலர் ஒன்றாகக் கூடிக் கொண்டு, தலைமை உயர் நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கத் துணிந்திருப்பது, நிறபேதக் கொடுமை, இன ஒதுக்கல், எவ்வளவு சூடேறிய பிரச்சினையாக அமெரிக்காவில் இருக்கிறது என்பதையும், வெள்ளையர், இன ஒதுக்கல் கூடாது என்பதை எத்தனை தீவிரமாக எதிர்க்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள உதவுவதாக இருக்கிறது

மீண்டும், இப்போது தேசீய ஜனநாயகக் கட்சியில் வடக்கு—தெற்கு என்ற பிளவு ஏற்பட்டிருக்கிறது. இன ஒதுக்கல் விவகாரத்தில், ஒத்துப்போவது என்பதே கிடையாது என்று கோஷிக்கும் கோஷ்டி ஒன்று உருவாகியிருக்கிறதாம். இதே மாதிரி கோஷ்டிதான் 1948-ல், ட்ரூமனுக்கு எதிராக ஒருவரை குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்திற்று. ஆனல், ட்ரூமன் வெற்றி பெற்ருர். இப்போது, ஏற்கனவே சந்தேகந்தான் என்ற நிலையிலிருக்கும் ஜனநாயகக் கட்சியினர் வரப்போகும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் சிலவே. இந்த அளவுக்கு மட்டுமே நிறவெறி கொண்டலைகின்றனர், அமெரிக்க வெள்ளையர்?

சில நாட்களுக்கு முன் நீக்ரோவ மாணவி ஒருவர் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார் அல்லவா? அதை ஒட்டி பெரும் 'அடிதடி'கள்கூட நடைபெற்றிருக்கின்றனவாம்.

அலபாமா மாகாணத்தில், மாண்ட்கமாரி எனுமிடத்தில் நீக்ரோவர் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைக்கு எதிராக, வெள்ளையரின் பஸ்களில் ஏறுவதில்லை என்று பகிஷ்காரம் செய்து வருகின்றனர். இந்த 'பகிஷ்கார இயக்கம்' வெற்றிகரமாக நடைபெற்று வருவதற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிருர், மிகப் பிரபலமான நீக்ரோவரான, 'ரால்ப் பஞ்' என்ற நோபல் பரிசு பெற்ற மேதை.

வெள்ளையரில் நாகரீகப் போக்குண்டோர் மனித உள்ளம் கொண்டோர், மாவீரன் லிங்கனை உணர்ந்தோர், தங்கள் இனத்தவரின் நிறவெறிக்கு எதிராகக் குரல் கொடுக்காமல் இல்லை. நீக்ரோவ எதிர்ப்பு — நீக்ரோவ ஆதரிப்பு இயக்கங்கள், வெள்ளை இனத்திலேயே முளைத்திருக்கின்றன. நிறபேதக் கொடுமை —இன ஒதுக்கல் பிரச்சினை அமெரிக்காவில் கொழுந்துவிட்டெரியப் போகும் பெரும் பிரச்சினையாகப் போகிறது என்று நடுநிலையாளர் கருதுகின்றனராம்.

வாக்காளர் பட்டியல் திருத்தம்

புதுடில்லி, மார்ச் 12—

1955-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைக்கும்வேலை எல்லா மாநிலங்களிலும் பூர்த்தியடைந்துவிட்டதாகவும், வாக்காளர்களின் எண்ணிக்கை மொத்தத்தில் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதைச் சொல்ல அவகாசம் தேவை என்றும் சட்ட அமைச்சர் எச். வி. படாஸ்கர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இரயில்பாதை மேல் பாலங்கள்

ரூ. 50 இலட்சம் அனுமதி

புதுடில்லி, மார்ச் 12—

மென்காற்று வசதி (ஏர்கண்டிஷன்) கொண்ட முதல் மூன்ருவது வகுப்பு இரயில்கள் அக்டோபர் திங்களுக்குள் டில்லி இரயில் நிலையத்திலிருந்து ஓடத் துவங்குமாம்.

இரயில்வே ஊழியர்களுக்கு வீடுகள் சீக்கிரமாகக் கட்டப்பட்டு வருகிறதாம்; மார்ச் இறுதிக்குள்ளாக சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களுக்கு வீட்டு வசதிகள் அளிக்கப்படுமாம்.

சென்னை நகரிலுள்ள பல்வேறிடங்களில் இரயில் 'கேட்டு'கள் அடிக்கடி நெடுநேரம் மூடப்பட்டு விடுவதால் போக்குவரத்திற்கு விளையும் சிரமத்தைப் போக்க சில இடங்களில் மேல்பாலங்கள் கட்டுவதற்குச் சென்னை சர்க்காருக்கு ரூ. 50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

சட்டசபையில் பட்டத்தின் ஆவேசம்

தன் திட்டம் தோல்வி காண்பதின் எதிரொலி

திரு-கொச்சி சட்டசபையில் கேள்வி நேரம்

தேவிகுளத்தில் மலையாளிகளை குடியேற்றுவதற்காக பி.சோ. சர்க்கார் ஆரம்பித்த குடியேற்றத்திலுட்பட்ட 'பட்டம் காலனி' குறித்து, திரு–கொச்சி சட்டசபையில் ஒரு கேள்வியின்மீது விவாதம் நடைபெற்றபோது திரு. பட்டம் தாணுபிள்ளைக்கு திடீரென்று ஆவேசம் வந்துவிட்டது. பிரஸ்தாப திட்டத்தை காங்கிரஸ் சர்க்கார் சரியான முறையில் அமுல் செய்யவில்லை என்று அவர் குற்றம் சாட்டினர். 'இங்கு எல்லாம் அரசியல்—கட்சி (பார்ட்டி, பாலிடிக்ஸ்)—நாசம்' என்றுகூறி அவர் அங்கலாய்த்தார்.

ஏ. சி. சாக்கோ (காங்.): இந்த நிதி வருடத்தில் தேவிகுளம் 'பட்டம் காலனி'யில் இடம்கோரி [illegible] அபேட்சைகள் கிடைத்தன?

மந்திரி கொச்சக்குட்டன்: [illegible]305 அபேட்சைகள்.

கே: எத்தனை பேர்களுக்கு இடம் அளிக்கப்பட்டது.

ப: 200 பேர்களுக்கு.

கே: எத்தனை பேர்கள் தற்போது அங்கு குடியிருந்து வருகிருர்கள்?

ப: 154 குடும்பங்கள்.

கே: அவர்களுக்கு என்ன வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது?

ப: குடியிருப்பு, குடிதண்ணீர், விவசாயம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

கே: மிகக் குறைந்த நபர்களை மாத்திரமே குடியேற்றியிருப்பதின் காரணமென்ன?

ப: பட்டம் காலனியில் மாத்திரம் குடியேறியவர்களைத்தான் இங்கு குறிப்பிட்டேன். எல்லா இடங்களிலுமாக 1,435 பேர்கள் குடியேறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பட்டம்: அதற்கான பொறுப்பு வகிக்கும் உத்தியோகஸ்தர் யார்?

ப: சர்வே விசேஷ அதிகாரி.

கே: அவர்மீது புகார் ஏற்பட்டிருக்கிறதா?

ப: இல்லை.

பட்டம்: எல்லா இடங்களிலும் எத்தனை பேர் குடியேறியிருக்கின்றனர்?

ப: நேற்றுதான் கொஞ்சம்பேர் அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பட்டம்: அதையெல்லாம் நான் கேட்கவில்லை. சர்க்கார் இந்தத் திட்டத்தை நாசப்படுத்தி வருவதாகவும், அங்கு குடியேறியிருப்பவர்களுக்கு எந்தவித வசதியும் செய்யவில்லையென்றும், எனவே திரும்பி தங்களது சொந்த இடத்திற்கு வந்து சேர விரும்புவதாகவும் அவர்களில் பலரிடமிருந்தும் எனக்கு கடிதங்கள் வந்துகொண்டிருக்கிறது.

ப:- 1,435 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் 46 பேர்கள் அங்கு வந்து சேரவில்லை. மீதியுள்ளவர்கள் குடியேறியிருக்கின்றனர்.

பட்:- இந்த விஷயத்தில் சர்க்காருக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று மனமிருந்தால் செய்ய வேண்டும். இல்லாவிடில் அதை நிறுத்தவேண்டும்.

ப:- தற்போது குடியேறுபவர்களுக்கு வீடு கட்டுவதற்கான கிராண்ட் கொடுக்கப்படுகிறது.

கே:- அவ்வாறு எத்தனை வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது?

ப:- நோட்டீஸ் வேண்டும்.

டி. டி. கேசவ சாஸ்திரி:- பட்டம் காலனியில் பட்டிகை ஜாதியினருக்கு (தாழ்த்தப்பட்டோர்) இடம் உண்டா?

ப:- எல்லா உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

குஞ்சன் நாடார்:- அங்கு குடியேறுபவர்களில் பலரும் வீடுகளையும், விவசாய நிலத்தையும் விலைக்குக் கொடுத்துவிட்டு சொந்திடம் திரும்பியிருப்பதாகத் தெரியுமா?

ப:- சிலர் அவ்வாறு சென்றிருக்கின்றனர்.

கேசவசாஸ்திரி:- பாடுபடுபவர்கள்தான் அங்கு குடியேற முடியுமென முன்பு மந்திரி கூறியபடி பாடுபடுபவர்களை அங்கு குடியேற்றுவீர்களா?

ப:- பாடுபடுபவர்கள் [illegible] குடியேற்றப்படுகின்றனர்.

மற்றொரு கப்பல் கட்டும் தளம்

புதுடில்லி, மார்ச் 13—

இந்தியாவில் மற்றொரு கப்பல் கட்டும் தளம் நிறுவ அரசியலார் திட்டமிட்டிருப்பதாகப் போக்குவரத்துத் துணைஅமைச்சர் ஓ. வி. அழகேசன் மாநிலங்கள் சபையில் தெரிவித்தார்.

பட்டம் தாணு ஏமாற்றம்!

பதவிக்கு வரச் செய்த முயற்சி தோல்வி

பட்டம் தாணு ஏமாற்றத்தோடு முகத்தைத் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டிவந்துவிட்டது.

பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் தேசீய நிர்வாகக் குழுவின் முடிவே பட்டத்தின் முகவாட்டத்திற்குக் காரணமாம்.

திரு—கொச்சியில், பனம்பள்ளி காலி செய்யும் பதவி நாற்காலியில் எவரையேனும் கூட்டுச் சேர்த்துக் கொண்டேனும் அமர்ந்து விட துடியாய்த் துடித்தார் பட்டம் தாணு.

டெல்லிக்கு ஓடினர்; ஆனல், அந்தோ பரிதாபம்! பி.-வின் சோ தேசீய நிர்வாகக் குழுவினர், கயாவில் வெளியிட்ட கட்சியின் கொள்கை அறிக்கைக்கு ஒப்ப நடந்துகொள்ளவேண்டும் என்று கூறிவிட்டனராம். காங்கிரசுடனே, கம்யூனிஸ்டுகளுடனே சேர்ந்து, பி. சோ. கட்சி திரு–கொச்சியில், மந்திரி சபை அமைக்கக் கூடாது என்று கூறிவிட்டனர் என்று தெரியவருகிறது.

தேசீய நிர்வாகக் குழு இது குறித்து விவாதித்தபோது ஜெயப்பிரகாஷ் நாராயணனும் உடன் இருந்தார் என்று தெரியவருகிறது.

மாவட்ட நிர்வாகம் தமிழில் நடைபெற வேண்டும்

சட்டசபையில் கோரிக்கை

மாவட்ட நிர்வாகம் தமிழில் நடைபெற வேண்டும் என்று சென்னை சட்டசபையில் இன்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

பல்வேறு சர்க்கார் உத்தரவுகளையும், அவை ஆங்கிலத்தில் இருப்பதால் புரிந்துகொள்வதில் கிராம அதிகாரிகளுக்கு மிகுந்த கஷ்டமிருக்கிறது. எனவே மாவட்ட நிர்வாகம் தமிழில் நடைபெறுவது, நிர்வாகத்திற்கு வசதியாயிருப்பதுடன் நிர்வாகத்திறனையும் மிகுவிக்கும் என்றும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

மாவட்ட நிர்வாகச் செலவுக்காக, ரூ. 3,44,35,700 மானியம் கோரினர் மந்திரி மாணிக்கவேலர்.

அந்தக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின்போதுதான் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது.

மேலும், சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டும் என்றும் கிராம அதிகாரிகள் நிலை உயர வழி செய்ய வேண்டும் என்றும் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரியிருக்கின்றனர்.

'மலேரியா ஒழிந்துவிடும்'

நியூயார்க், மார்ச் 13—

"மருந்துகளும், பயிற்சி பெற்றவர்களும் கிடைத்தால் உலகத்தின் முக்கியமான பிரதேசங்களில் பத்தாண்டுகளில் அல்லது இருபது ஆண்டுகளில் மலேரியாவை ஒழித்துவிட முடியும்,"

என்று, 23 நாடுகள் சுற்றுப் பிரயாணம் செய்து இப்பொழுதுதான் திரும்பியுள்ள வெப்ப நாட்டு மருத்துவத்துறை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

ஐரோப்பாவிலும், மத்தியக் கிழக்கிலும், ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், ஆசியாவிலும் நான்கு மாதம் பிரயாணம் செய்த காலத்தில் கண்டறிந்த சில வற்றைப் பற்றி டாக்டர் வில்லியம் பிரை என்பவர், பத்திரிகையாளரிடம் இதுபற்றி மேலும் பேசுகையில், வெப்ப நாட்டு மருத்துவத் துறையில் இன்று மிகவும் அவசியமாக வேண்டியவை பலன்தரும் மலிவான மருந்துகளேயாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

'புதிய மருந்துகளைப் பெருவாரியாக உற்பத்தி செய்யும் தொழில் முறைகள் பூரணமாக அமைக்கப்படும்போது, அதற்குச் செய்ய வேண்டிய காரியம், செய்து முடிக்கக்கூடியதாகும்' என்று அவர் உணர்கிருர்.

அவர் தமது சுற்றுப் பிரயாணத்தில் 10,000 டாக்டர்கள், வைத்திய மாணவர்கள், பொது சுகாதார நிர்வாகிகள், முன்னிலையில் ஐம்பதுக்கு மேற்பட்ட விரிவுரைகள் ஆற்றியுள்ளார்.

பிரான்சுக்கு செல்வாராம்!

புதுடில்லி, மார்ச். 12—

பிரான்சுக்கு வரும்படி பிரதமர் நேருவை தான் அழைத்ததாயும், அவர் அவ்வழைப்பைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் பிரெஞ்சு அயல் நாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னணி வீரர்கள் முழக்கம்

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

யாது என்பதை அவர்கள் உணரவேண்டும்."

கே. ஏ. மதியழகன்

(அர்த்தாலும் மாணவர்களும்)

"பிப். 20—அர்த்தாலில் தமிழகமெங்கணுமுள்ள மாணவர்கள் பள்ளிகளையும், கல்லூரிகளையும் காலியாக்கிவிட்டு, கட்டாயம் பள்ளிகளுக்கு வந்துதானு[illegible]ண்டும் என்று உத்தரவிட்ட [illegible]ரின் முகத்தில் கரி பூசி[illegible]டு, அர்த்தாலே வெற்றியாக்க [illegible] மனவு உதவியிருக்கின்றனர். [illegible]தாலுக்கு முன்புகூட மாணவர்கள் தான் ஆங்காங்கே, முக்கியமான நகரங்களில் எல்லாம் வேலை நிறுத்தம் செய்து, தமிழ் மக்களுக்கு மாநில புது அமைப்பில் இழைக்கப் பட்டுள்ள அநீதியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"பிப். 20-ல் தமிழகமெங்கணும் உள்ள தி. மு. க. மாணவர் கிளைத் தோழர்கள் மாணவர்களை ஒன்று திரட்டுவதிலும் அவர்களை அர்த்தாலில் ஈடுபடுத்துவதிலும் பெரும்பணி ஆற்றியிருக்கின்றனர். குறிப்பிடத் தகுந்த அந்த மாணவர்களின் அரும்பணியைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். அவர்களைப் பாராட்டுகிறோம்."

கண்ணதாசன்

(அர்த்தாலும் கிளைக் கழகங்களும்)

"பிப். 20-ந் தேதி அர்த்தாலை சிறப்புற நடத்தித் தருமாறு தமிழகமெங்கணுமுள்ள தி. மு. கழக கிளைகளைக் கேட்டுக்கொள்வதற்காக, கழக நிர்வாகிகளைச் சந்தித்து அர்த்தால் முறைபற்றி விளக்குவதற்காக, நமது பொதுச் செயலாளர் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, துணைப் பொதுச் செயலாளரும் நானும் சென்றிருந்தோம். நீண்ட அந்த சுற்றுப் பயணத்தில் எண்ணற்ற கிளைக் கழகத் தோழர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டிற்று.

"பல ஊர்களிலே, மரங்கள் காய் காய்க்கும்; பழம் பழுக்கும் என்பதுமட்டுமல்ல, கழகக் கொடிகளையும் தாங்கி நிற்கும் என்பதையும் கண்டோம்.

"பிப். 20-ல் நமது கிளைக் கழகங்கள், ஆங்காங்கே உள்ள இதர கட்சித் தோழர்களையும் கூட்டு சேர்த்துக்கொண்டு, கடமை உணர்ச்சியோடு, கண்ணியம் கெடாமல், கட்டுப்பாடு குலையாமல் அர்த்தால் வெற்றிக்கு—உழைத்ததை நாடு நன்கறியும். சின்னஞ்சிறு கிராமங்களிலெல்லாம்கூட தழைத்திருக்கும் கழகக் கிளைகள், இரண்டொரு கடைகளை மட்டுமே கொண்ட அந்தந்த ஊர்களிலும் கூட அர்த்தாலை வெற்றிகரமாக்கியிருக்கின்றனர். அந்த கிராமங்களிலே வாழும் மக்களுக்கு எல்லாம்கூட, அர்த்தால் ஏன்? எதற்காக? கூட்டணி ஏன் அமைந்தது? தமிழருக்கு வந்துற்ற கேடு யாது என்பவற்றையெல்லாம் விளக்கிக் கூறி, கிராம மக்களெல்லாம்கூட உண்மை நிலையறிந்து, உற்சாகத்தோடு பொதுவேலை நிறுத்தத்தில் பங்கு பெறச் செய்ய பெரும்பாடு பட்டுள்ளனர் நமது கிளைக் கழகத் தோழர்கள். அந்தக் கிளைக் கழகத் தோழர்களுக்கு நம் நன்றி தெரிவிக்கிறோம்."

காஞ்சி - கல்யாணசுந்தரம்

(அர்த்தாலும் - பத்திரிகைகளும்)

"இந்தியாவில் மற்ற மாகாண பத்திரிகைகளுக்கும் இம்மாகாண பத்திரிகைகளுக்கும் அடிப்படையிலேயே ஒரு பெரும் வேறுபாடு உண்டு. இந்த மாகாண பத்திரிகைகள் இங்குள்ள மக்களின் நலன்களுக்காக நடத்தப்படுவன அல்ல. இங்கு வாழும் மக்களில் சிறுபான்மையினரான ஒரு வகுப்பினர் உயர்ந்தவர் என்ற கர்வத்தோடு நீண்ட நெடுங்காலத்திற்கு வாழ வேண்டும் என்ற ஒரு வகுப்பினரின் 'நலனை'க் காக்க மட்டுமே இந்த மாகாண பத்திரிகைகள் பணிபுரிகின்றன. இந்தப் பண்பாடு கொண்டவை அல்ல மற்ற மாகாணங்களில் உள்ள எல்லா பத்திரிகைகளும்.

"இந்த மாகாணத்திலேயிருக்கும் பத்திரிகைகள், கூட்டணி அமைத்து, தமிழ் மக்களுக்கு கூட்டணியின் திட்டம் அறிவிக்கப் பட்டதும்; திட்டத்திற்கு நியாயமாக, ஜனநாயக முறைப்படி எந்த அளவு முக்கியத்துவம் தரவேண்டுமோ அந்த அளவு முக்கியத்துவம் தரவில்லை. பிப் 20 அர்த்தால் பற்றிய விளக்கம் தருவதற்காக, பல இடதுசாரிக் கட்சியினரும் நாட்டு மக்களை பல்லாயிரக் கணக்கில் திரட்டிவைத்து கூட்டங்கள் நடத்தினர்கள்.

அப்படி அர்த்தாலுக்காக ஆதரவு தேடும் பொருட்டு நடைபெற்ற எண்ணற்ற கூட்டங்கள் பற்றிய செய்திகளை முழுவதுமாக இருட்டடிப்பு செய்தன. அர்த்தாலை ஆதரித்து இந்த பத்திரிகைகள் எழுத வேண்டும் என்று அல்ல நாம் எதிர்பார்ப்பது. அர்த்தாலைக் கண்டித்துக்கூட எழுதட்டும். எழுதிற்று; ஒரு தமிழ் பத்திரிகை அப்படி எழுத அவற்றிற்கு சுதந்திரம் உண்டு. ஆனால் அர்த்தால் எல்லா இடதுசாரிக் கட்சியினரின் ஏற்பாடு என்பதால், ஜனநாயகப் பண்பிருக்குமானால், அர்த்தாலுக்கு ஆதரவாகத் தரப்படும் வாதங்களையும் வெளியிடுவது தானே முறை.

"இதே மாதிரியாக தமிழகத்தில் நடைபெற்றது போலவே மேற்கு வங்கத்திலும், மேற்கு வங்க-பீகார் இணைப்புத் திட்டத்தை எதிர்த்து அங்குள்ள இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுகூட ஒரு பொதுவேலை நிறுத்தம், அர்த்தால் நடத்தினர். அங்குள்ள பத்திரிகைகள் இத்தனைக்கும் கூடுமானவரை அர்த்தால் பற்றிய விபரங்களை வெளியிட்டுத் தான் வந்தன. என்றாலும் இடதுசாரித் தலைவர்கள், பத்திரிகைகள், அர்த்தாலை ஒட்டிய இடதுசாரிகளின் நடவடிக்கைகளுக்கு, நிகழ்ச்சிகளுக்கு சரியான விளம்பரம் தரவில்லை என்று குறைப்பட்டனர். உடனே, மேற்கு வங்க பத்திராதிபர்கள் ஒன்றுகூடி, விவாதித்து, 'இடதுசாரிகளின் நிகழ்ச்சிகளுக்கு எங்களால் முடிந்த அளவு முக்கியத்துவம் தந்திருக்கிறோம்' என்று சமாதானம் கூறியிருக்கின்றனர். ஆனால் இங்குள்ள பத்திரிகைகளோ?

"இடதுசாரிகளால் நடத்தப்படுவது அதிலும் தி. மு. கழகத்தால் நடத்தப்படுவது என்பதற்காகவே, ஒரு கூட்டத்திற்கோ அல்லது வேறெந்த நிகழ்ச்சிக்குமோ நியாயமாக, செய்திகளுக்குத் தரவேண்டிய முக்கியத்துவத்தைத் தருவதில்லை என்பதல்ல; செய்திகளையே வெளியிடுவதில்லை.

இப்படியெல்லாம் இந்தமாகாண பத்திரிகைகள் கேவலமான முறையில் நடந்துகொண்டும், இருட்டடிப்புச் செய்தும், பிப். 20-ல் தமிழகமெங்கும் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. அர்த்தாலைப் பற்றிய செய்திகளையேனும், நேர்மையாக ஒழுங்காக வெளியிட்டனவா? அந்த பத்திரிகைகள் என்றால் அதுவும் இல்லை. அர்த்தாலில் பங்கு கொண்ட பத்திரிகைகள் இரண்டே இரண்டு தமிழ் தினசரிகள் தான், 'நம் நாடு' நீங்கலாக. இந்த இதழ்களைப் பற்றியெல்லாம் தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அந்த இதழ்கள் உணரச் செய்வது, தமிழ் மக்கள் கையில் தான் உள்ளது."

சி. பி. சிற்றரசு

(அர்த்தாலும் தொழிலாளர்களும்)

"பிப். 20—பொது வேலை நிறுத்தத்தில், தமிழகமெங்கணுமுள்ள தொழிலாளர் பெருமக்கள் பல்லாயிரக் கணக்கில் பங்கு கொண்டு வெற்றிக்குஉழைத்தனர். எங்கெங்கே, பெரும் தொழிற்சாலைகள் உண்டோ அங்கு மட்டுமின்றி சிறு சிறு தொழிலகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களும் அர்த்தாலுக்கு மனப்பூர்வமாக உழைத்தனர். சென்னையிலே 'சிம்சன்' கம்பெனித் தொழிலாளர்கள் எப்படி கட்டாயமாக வேலை செய்யுமாறு நிர்வாகத்தினரால் வற்புறுத்தப்பட்டனர் என்பதை நமக்குக் கடிதமூலம் தெரிவித்திருக்கிறார்கள். பகல் உணவுக்காகக் கூட வீட்டிற்கு அனுப்பாமல் வேலை செய்யக் கூறினார்களாம்.

'நாங்கள் உணவும் கொள்ளவில்லை. உள்ளே வேலையையும் மனமாறச் செய்யவில்லை. எங்கள் உடல்கள் மட்டுமே தொழிற்சாலைக்குள்ளிருந்தது. உள்ளமெல்லாம் வெளியே நகர் முழுதும், நாடு முழுதும் நடைபெறும் அர்த்தாலைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தன.' என்று அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். 'சமன்' சதாரா செய்பவர்களை எல்லாம், 'அமீனா'க்களை எல்லாம், போலீஸ் வேஷம் போடச்செய்து; வீதிகளில் நிறுத்திவைத்து பயமுறுத்தியும் கூட, வேலைக்கு ஆபத்துவரும், வயிற்றில் மண்ணடிப்போம் என்ற அச்சுறுத்தியும்கூட, சர்க்காரும் தேசியத் தொழிற் சங்கத் தலைவர்களும் வேலைநிறுத்தம் கூடாது என்று தடுத்துக்கூட தமிழகத் தொழிலாளர் பெருமக்கள் பொது வேலை நிறுத்தத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித் தந்தனர். அவர்களுக்கெல்லாம் நமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்."

சத்தியவாணி-முத்து

(அர்த்தாலும் வியாபாரிகளும்)

பொதுவேலை நிறுத்தம் முழு வெற்றி பெற்றதென்றால் அது வியாபாரிகளால்தான். பெரிய கடைகள் மட்டுமின்றி சின்னஞ்சிறு கடைகள் எல்லாம்கூட காய்கறி விற்பனை செய்யும் தாய்மார்கள்கூட பிப். 20 அன்று கடை அடைப்புச் செய்தனர். எங்கேனும் கடைகளைத் திறக்க வேண்டுமென விரும்பிய ஓரிரு காங்கிரசார் இருந்திருப்பாரகளேயானால் அவர்களும்கூட கடைகளைத் திறக்க முடியாதவாறு இதர வியாபாரிகள் செய்துவிட்டனர். 'போலீசார்பாதுகாப்புக் கிடைக்கும் கதவுகளைத் திறங்கள்' என்ற சர்க்கார் அறிவிப்பை வியாபாரிகள் வெறுத்து ஒதுக்கினர். தமிழக வர்த்தகர்கள் வியாபாரிகள் மட்டுமின்றி வடநாட்டு வியாபாரிகளும், மலையாள கடைக்காரர்களும்கூட கூட்டணியின் வேண்டுகோளுக்கு ஒப்ப, கடைகளை மூடினர். இந்த பிப். 20 அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பும் தந்த வியாபாரிகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம்."

மு. கருணாநிதி

(அர்த்தாலும் அடக்கு முறையும்)

"அர்த்தால் எத்தனையோ அமைதியாக நடைபெற்றும்கூட ஆளவந்தார்கள், காமராசர் சர்க்கார், கொடிய அடக்குமுறைகளைக் கையாண்டு, அர்த்தாலைத் தோற்கச் செய்ய முயற்சித்துத் தோல்வி கண்டிருக்கின்றனர்.

"பொதுவில், போலீசார், அர்த்தால் அமைதியாக நடைபெறுவதற்கு ஒத்துழைத்திருக்கிறார்கள் என்றாலும், அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றாலும், சிற்சில இடங்களில் வெறிகொண்டு தாண்டவமாடியிருப்பதையும் நாம் குறிப்பிடாமலிருக்க முடியாது.

"தம்மம்பட்டி என்ற சேலம் மாவட்ட கிராமத்தில், 60, 70 பேர் கொண்ட ஊர்வலத்தை, அமைதியாக நடைபெற்ற ஊர்வலத்தைக் கலைப்பதற்காக போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள். அந்த விபரங்களை தோழர் மதியழகன் கண்டு வந்து ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

"துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான தோழர்களை மருத்துவ மனையில் நானும் கண்டேன். அதில் ஒருவருக்கு குண்டு ஒரு கால் தொடையில் பாய்ந்து மறு காலையும் துளைத்து வெளியே வந்திருக்கிறது. அவரது ஒரு கால் பாதிக்கு மேல் எடுக்கப்பட்டுவிடும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். கால்களோடு நடமாடிய அவரை இன்று இந்த காமராசர் சர்க்கார் கட்டை வைத்துக் கொண்டு நடக்க வேண்டிய நிலைக்குக் கொண்டுவந்துவிட்டனர். முடமாக்கியிருக்கிறார்கள். இதர மூன்று தோழர்களுக்கும் கூட பலத்த காயம்.

"அதேபோல கள்ளக்குறிச்சியிலும் இந்த சர்க்கார் துப்பாக்கியை நீட்டியிருக்கிறார்கள். அங்கேயும் இருவருக்குப் படுகாயம்.

"கடலூரில், தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள்மீது, கொள்ளையடித்ததாக விசித்திரமான வழக்குத்தொடர்ந்திருக்கிறார்கள். அவருக்கு 15 ஆண்டுகள் வரையில் சிறைத் தண்டனை அளிக்கக்கூடிய வகையில், வழக்கு கடுமையாக்கப்பட்டிருக்கிறது.

"இது மட்டுமா? சென்னையில் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் இருவர் தாக்கப்பட்டிருக்கின்றனர். வேறு பல ஊர்களில் தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள் போலீசார். நூற்றுக்கணக்கான தோழர்களைச் சிறைப்படுத்தி வழக்கு தொடுத்திருக்கிறார்கள். தமிழகமெங்கணும் அமைதிகெடாது நடத்தப்பட்ட அர்த்தாலில், இப்படி அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களை நடத்தி அமைதியைக் கெடுக்க சர்க்கார் முயற்சித்தார்கள். என்றாலும் அமைதியாக கண்ணியம் கெடாது, ஆத்திரம் கொள்ளாது தோழர்கள் பொது வேலைநிறுத்தத்தை வெற்றியாக்கியுள்ளார்கள்."

காமராசர் துரோகம் பூர்த்தி

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தரப்பட்டு இருக்கிறது. இதற்கு நிதி அமைச்சர் என்ன பதில் தருவாரோ? அவர், தம் அரசாங்கத்திற்கு இருப்பதாகக் குறிப்பிடும் 'நல்லுணர்வு'க்கு, உண்மையை மறைத்துச் சாதிப்பது என்பதுதான் பொருள்போலும்!

தேவிகுளம்—பீர்மேடு குறித்து தமிழ் மக்கள் கொண்டுள்ள உணர்ச்சியை இந்தியப் பிரதமரிடம் தாங்கள் அறிவித்ததாகக் கூறியுள்ளார் நிதிஅமைச்சர்.

ஆனால், நியாயமான உரிமையைத் தமிழர்கள் அடைந்து மகிழ்வதில் நிதிஅமைச்சருக்கு—இல்லை—காமராசர் அரசாங்கத்திற்கு அக்கறை இருப்பதாகக் காணோம்! அக்கறை இருக்குமானால், ஒப்புக்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பை வற்புறுத்தாது வாய்மூடிக் கிடந்திருக்குமோ, இத்திருமேனிகள்?

"பிணக்குள்ள பகுதிகள் குறித்து முடிவாகத் தீர்மானிக்கும் பொறுப்பு மக்கள் சபைக்குண்டு. அதன் தீர்ப்பு எதுவானாலும், அதை ஏற்றுக் கொள்ளும்படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்வதுதான் எனது ஒரே கோரிக்கை!" என்கிறார் நிதி அமைச்சர்!

என்ன பொருள் இதற்கு?

காங்கிரஸ் மேலிடம், ஜனநாயகம் என்னும் போர்வையில் சர்வாதிகாரமாகத் தமிழர்களை வஞ்சிக்கும். அந்த வஞ்சகம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு, தமிழர்களைக் காட்டிக்கொடுக்கும் கடமையை நாங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். எனவே, எங்கள் 'நல்லுணர்வில்' நம்பிக்கை வைத்து, காங்கிரஸ் மேலிடத்தின் எதேச்சாதிகாரத் தீர்ப்புக்குத் தமிழ் மக்கள் தலைவணங்க வேண்டும்!

'மீறினால்—தடியடி கொடுப்போம்—துப்பாக்கிக் கொண்டு சுட்டு வீழ்த்துவோம்—பொய் வழக்கு போடுவோம்—தமிழ் உரிமைக் குரலை ஒடுக்கக்கூடிய அடக்குமுறைகள் அனைத்தையும் மேற்கொள்ளுவோம்.' இதுதான் காங்கிரஸ் ஜனநாயகம்!

இப்படி கூறுவதுபோல் இருக்கிறது, நிதி அமைச்சரின் பதில்!

தமிழ் மக்களுக்கு காமராசர் அரசாங்கத்தரல் செய்யக் கூடிய துரோகம், இத்துறையைப் பொறுத்தவரையில் பூர்த்தியாகி விட்டது என்றே முடிவு கட்டி விடலாம்!

கண் கெட்ட பிறகு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குறிப்பு: இப்பொழுது, தேவைக்கு அதிகமான அளவில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்து இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. 'அதிக உற்பத்தி' என்ற கூக்குரல் கிளப்பப்படும் இக்காலக் கட்டத்தில்தான், தென்னிந்தியாவில் புதிய சர்க்கரை ஆலைகளைத் துவக்கக் கூடுதலான அனுமதிகள் அளிக்க இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கிறது.

தி. மு. க. மாணவர் கிளை பொதுக்கூட்டம்

17—3—56 மாலை 6 மணிக்கு மணப்பாறை பழைய சந்தை திடலில் தோழர் மா. இளங்கீரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், அன்பில் தர்மலிங்கம், காசிநாதன், ச. இரும்பொறை, என். வடிவேலன், பொ மதிவாணன், நா. சக்கரபாணி ஆகியோர் பேசுவர்.

இலக்கிய கழக ஆண்டுவிழா

17—3—56 மாலை 5 மணிக்கு இருங்களூர் புதிய தரங்கை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி இலக்கியக் கழக 3 ம் ஆண்டு விழா பள்ளிக் கட்டிடத்தில் நடைபெறும். பல நிகழ்ச்சிகளுடன் தோழர் ஜி. வேதக்கண்ணு அவர்கள் தலைமையில் 'புதிய தமிழகம்' எனும் பொருள் பற்றி தோழர் டி. கே. சீனிவாசன் பேசுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

16—3—56 மாலை 6-30 மணி அளவில், சென்னை 'மண்ணடி முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் கா. மு. சீனுவாசன் தலைமையில் 'ஒற்றுமை' எனும்பொருள் பற்றி பலர் பேசுவர்.

கழகப் பொதுக்கூட்டம்

17—3—56ல், சத்தியவேட்டில் தோழர் எம். கே. வி. கோபால் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆ. கிருஷ்ணன், ஏ. சு. மணி, நாதம் டி. இராமசாமி பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.